

விமான நிலைய மெட்ரோ நிலையம் முதல் மெப்ஸ் வரை

# குளிர்சாதன வசதியுடன் டெம்போ டிராவலர் இணைப்பு சேவை

## மருத்துவமுகாமில் 1,272 பேருக்கு பரிசோதனை

சென்னை,பிப்.26–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பயணிகளின் போக்குவரத்து வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மெட்ரோ ரெயில்

இதன் ஒரு பகுதியாக போக்குவரத்து இணைப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஷேர் ஆட்டோ, கார், மாநகர போக்குவரத்து கழகத்தின் சிறிய பஸ், மெட்ரோ வேன் இணைப்பு சேவை, இ–பைக், சைக்கிள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் இணைப்பு போக்குவரத்து சேவையில் கூடுதல் வசதியாக சென்னை விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் சேவை தொடங்கப்பட்டு உள்ளது. ரூ.20 கட்டணத்தில் 30 நிமிட இடைவெளியில் இந்த இணை பேருந்து சேவை வழங்கப்படுகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறும்போது, ஏற்கனவே விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து பம்மல் வரை சென்று வர 5 மெட்ரோ சிற்றுந்து இணைப்பு சேவை மற்றும் ஒரு குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை உள்ளது.

டெம்போ டிராவலர்

விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து தாம்பரம் சானடோரியம் மெப்ஸ் வரை சென்றுவர 4 மெட்ரோ சீருந்து இணைப்பு சேவை வழங்கப்படுகிறது.

இதனுடன் கூடுதலாக விமான நிலையம் மெட்ரோ நிலையம் முதல் மெப்ஸ் வரை சென்றுவர ஒரு குளிர்சாதன வசதியுடன் கூடிய டெம்போ டிராவலர் இணைப்பு சேவை தற்போது தொடங்கப்பட்டுள்ளது. பயணிகளின் தேவைக்கு ஏற்ப, இணைப்பு சேவை விரிவாக்கப்படுகின்றன.

மருத்துவ முகாம்

மெட்ரோ ரெயில் நிலையம் சார்பில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச மருத்துவ முகாம் கடந்த 24–ந்தேதி முதல் 28–ந்தேதி வரை நடைபெறுகிறது.

நேற்று சென்ட்ரல் மெட்ரோ, ஏஜி.டி.எம்.எஸ்., சைதாபேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி. திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரெயில் நிலையங்களில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் சுமார் 1,272 பேர் பயன் அடைந்தனர்.

அவர்களுக்கு உயரம் மற்றும் எடை, ரத்த அழுத்தம், சீரற்ற ரத்த சர்க்கரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

வருகிற 28–ந்தேதி வரை நடைபெறும் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்திக்கொள்ளுமாறு மெட்ரோ ரெயில் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.